# தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

---

## மின் உற்பத்தி மற்றும் பகிர்மானத்திற்கான

## மின் கட்டணம் நிர்ணயித்தல்

---

மி.க.ம எண். 1/2017

ஆணை நாள்: 11-08-2017

(11-08-2017 முதற்கொண்டு நடைமுறைப்படுத்தல்)

## தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

## [(2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 82ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்படி அமைக்கப்பட்டது) ]

| | | | |
|---|---|---|---|
| முன்னிலை : | திரு. சு. அட்சயகுமார் | – | தலைவர் |
| | திரு.கெ. ராஜகோபால் | – | உறுப்பினர் |
| | டாக்டர் த. பிரபாகரராவ் | – | உறுப்பினர் |

**மி.க.ம. எண். 1/2017 -ஆணை**

**ஆணை நாள்: 11-08-2017**

இந்தப் பொருளில் : மின்உற்பத்தி மற்றும் பகிர்மானத்திற்கான மின்கட்டணம் நிர்ணயித்தல்

–––––

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 62 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு மற்றும் 86 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) கூறின்படியும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்து பிற அதிகாரங்களையும் செலுத்தி மற்றும் 2017ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20ஆம் நாள் நடைபெற்ற மாநில ஆலோசனைக்குழுவின் ஆலோசனைகளை கருத்திற்கொண்டும் மற்றும் 2017ஆம் ஆண்டு ஜுலை 25, 2017 ஆம் ஆண்டு ஜுலை 28 மற்றும் 2017ஆம் ஆண்டு ஆகஸ்டு 2 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டங்களின்போதும் மற்றும் பொதுமக்களிடமிருந்து எழுத்து மூலமாக பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் மறுப்புரைகளை கருத்திற்கொண்டும் மேற்சொன்ன சட்டத்தின் 64ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானத்திற்கான மின்கட்டணவீத ஆணையினை இதன்மூலம் பிறப்பிக்கிறது.

இந்த ஆணை 2017ஆம் ஆண்டு ஆகஸ்டு 11ஆம் நாள் முதற்கொண்டு நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| (ஒப்பம்)<br>டாக்டர் த. பிரபாகரராவ்<br>உறுப்பினர் | (ஒப்பம்)<br>கெ. ராஜகோபால்<br>உறுப்பினர் | (ஒப்பம்)<br>சு. அட்சயகுமார்<br>தலைவர் |

*(ஆணையத்தின் ஆணைப்படி)*

(ஒப்பம்)
(சு. சின்னராஜலு)
செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**<u>மின்கட்டண பட்டியல்</u>**

## 6.1 <u>உயர் அழுத்த மின் வழங்கல் மின்நுகர்வோருக்கான மின்கட்டணம்</u>

### 6.1.1 உயர் அழுத்த மின் வழங்கலுக்குப் பொருந்தக்கூடிய பொது வகைமுறைகள்

**6.1.1.1 <u>மின் வழங்கல் வகைகள்:</u>** மின் வழங்கல் வகைகள் தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பு மற்றும் தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பு ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. உயர் அழுத்த மின் நுகர்வோரின் மாறுபட்ட வகைகளுக்காக குறித்துரைக்கப்பட்ட உயர் அழுத்த மின்கட்டணம், மேற்கூறிய விதித் தொகுப்புகளுக்கு இணங்க, அதி உயர் அழுத்த அளவில் மின்சாரம் வழங்கப்படும் மின்நுகர்வோருக்கும் பொருந்தக் கூடியதாகும்.

**6.1.1.2 கிளையலைகள்:**

(அ) மின்வழங்கல் விதித்தொகுப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு, மத்திய மின்சார அதிகார அமைப்பின் ஒழுங்குமுறை விதிகளினால் குறித்துரைக்கப்பட்ட அனுமதிக்கக்கூடிய வரம்புகளுக்கு அப்பால் உரிமதாரரின் மின்னமைப்பில் கிளையலைகளின் (harmonics) குவியலை தவிர்க்கும் பொருட்டு போதிய கிளையலை வடிகட்டும் மின்சாதனத்தை மின்நுகர்வோர் வழங்கத்தவறும் போது, மின்நுகர்வோர் அந்தந்த பட்டியலுக்குரிய மின்கட்டணத்தில் 15 விழுக்காடு இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவராவார். கிளையலைகளின் அளவீடு மின்நுகர்வோர்/ அவர்களுடைய பிரதிநிதிகளின் முன்னிலையில் தரமான மின்னளவிகள் / சாதனம் பயன்படுத்தி மின்பகிர்மான உரிமதாரரால் செய்யப்படுதல் வேண்டும். இந்த இழப்பீடுக் கட்டணங்கள், உயர் அழுத்த மின்கட்டணவீதம் IV (வேளாண்மைக்கான நீரேற்று நீர்ப்பாசனம்) தவிர அனைத்து உயர் அழுத்த மின்நுகர்வோர் வகையினருக்கும் பொருந்தக்கூடியதாகும்.

(ஆ) மத்திய மின்சார அதிகார அமைப்பு 11 கிவோ/22 கிவோ மின் வழங்கல் மின்தொடர் நுகர்வோர்களுக்கு கிளையலைகளுக்கான செந்தரங்களை குறிப்பிட்டு கிளையலைக்

கட்டுப்பாடுகளுக்கு அவற்றைப் பொறுப்பாக்கும் வரையில் 11 கிவோ மற்றும் 22 கிவோ இல் இணைந்துள்ள அனைத்து உயர் அழுத்த நுகர்வோர்களுக்கும் இது பொருந்தக் கூடியதாகாது.

(இ) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தங்களுடைய மின்சுமையில் அறிமுகப்படுத்தப்பட்ட கிளையலைகள், மத்திய மின்சார அதிகார அமைப்பினால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்குள் இல்லாதிருக்குமானால், அவர்கள் 15 விழுக்காடு இழப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்த வேண்டும் என்று உரைக்கும் மூன்று மாதங்கள் கால அவகாச அறிவிப்பு கொடுத்தல் வேண்டும். கிளையலைகளை அனுமதிக்கப்பட்ட வரம்பிற்குள் கொண்டுவராவிட்டால் மூன்று மாத அறிவிப்புகாலம் முடிவடைந்த நாளிலிருந்து இழப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். கிளையலைகளை அனுமதிக்கப்பட்ட வரம்பிற்குள் நுகர்வோர் கொண்டுவரும்போது இழப்பீட்டுக் கட்டணங்கள் விலக்கிக் கொள்ளப்படுதல் வேண்டும்.

6.1.1.3 உயர் அழுத்த மின் கட்டணம் – IV மற்றும் V தவிர, உயர் அழுத்த மின் கட்டணத்தின் கீழ் வழங்கப்படும் மின் வழங்கலைப் பொருத்த வரை செய்சட்டங்கள்/ சட்டங்களுக்கிணங்கவுள்ள வசதிகளை அல்லது மின்நுகர்வோரின் வளாகங்களுக்குள் தம்முடைய பணியாளர்கள் / மாணவர்கள் / நோயாளிகள் / குடியிருப்போருக்கு நீட்டிக்கப்படும் வசதிகள் போன்று, மின்நுகர்வோரின் நிறுவனத்தின் முக்கியமான நோக்கத்திற்கு இணையுறுவான வசதிகளை உருவாக்குவதற்கு மின் வழங்கல் பயன்படுத்தப்படுமானால், அவ்வேலையை வெளிப்புறப்பணிகள் அடிப்படையில் மூன்றாம் தரப்பினரால் செய்யப்பட்டாலும் அல்லது நுகர்வோரால் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் அது உண்மையான நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும். எனினும், அத்தகைய வசதிகள் பொது மக்களுக்கு நீட்டிக்கப்படுமானால் அல்லது பகுதி/முழு வளாகம் உணவு விற்பனை வளாகத்தில் தங்களின் பெயரில் சேவைகளை அளிக்கும்

உணவுக்கடை போன்றவற்றிற்கு குத்தகைக்கு/வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தால் அத்தகைய வசதிகளுக்காக நுகரப்படும் மின்நுகர்வு, உரிமதாரரால் தனியாக மின்னளவிடப்படும் மற்றும் உரிய தாழ்வழுத்த மின்கட்டணவீதத்தின் கீழ் மின்திறன் கட்டணம் மட்டுமே விதிக்கப்படும். அவ்வாறாக மின்னளவியிடப்பட்ட மின்நுகர்வு, பட்டியலிடுகைக்காக உயர் அழுத்தம்/அதி உயர் அழுத்த மின்வழுங்கலுக்கான முதன்மை மின்னளவியில் பதிவு செய்யப்பட்ட மொத்த மின் நுகர்விலிருந்து கழிக்கப்படும்.

**6.1.1.4** உயர் அழுத்த மின் கட்டணம் I A, II A, II B, III ஆகியவற்றின் கீழ் வழங்கப்படும் மின் வழங்கலைப் பொருத்தவரை வளாகங்களுக்குள் உள்ள குடியிருப்பிட பகுதிகளுக்கான மின்சார பயன்பாடு மின்நுகர்வோரால் தெரிவு செய்யப்பட்டபின் உரிமதாரரால் தனியாக மின்னளவியிடப்படுதல் வேண்டும் மற்றும் மின்திறனுக்கு மட்டும் தாழ்வழுத்த மின் கட்டணம் I-C-இன் கீழ் வசூலிக்கப்பட வேண்டும். அவ்வாறாக மின்னளவியிடப்பட்ட மின்நுகர்வு, பட்டியலிடலுக்கான உயர்அழுத்த / அதிஉயர் அழுத்த மின் வழங்கல் முதன்மை மின்னளவியில் பதிவு செய்யப்பட்ட மொத்த மின்நுகர்விலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

**6.1.1.5** உயர்அழுத்த மின் வழங்கல் I A, II A, II B, III ஆகியவற்றைப் பொருத்தவரை, 2000 சதுர அடிக்கு மேற்படாததும் மின்நுகர்வோரின் வளாகத்திற்குள் உள்ளதுமான கூடுதல் கட்டட கட்டுமானம் கட்டுவதற்காக அந்த மின் வழங்கல் பயன்படுத்தப்படுமானால், மின்னிணைப்பிலிருந்து அனுமதியளிக்கப்பட்டு இருந்து வரும் மின்கட்டணத்தின் கீழ் வசூலிக்கப்படலாம். 2000 சதுர அடிக்கு மேலுள்ள கூடுதல் கட்டுமானத்திற்காகவும் மற்றும் (தாழ்வழுத்த மின்கட்டண வீதம் VI-இன்கீழ் பொருள்வரையறை செய்யப்பட்ட) அபரிமிதமான விளக்கொளியும் உரிமதாரரால் தனியாக மின்னளவியிடப்படுதல் வேண்டும் மற்றும் அந்த மின்திறனுக்கான கட்டணம் மட்டுமே தாழ்வழுத்த மின்

கட்டணம் VI இன் கீழ் வசூலிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறாக மின்னளவியிடப்பட்ட மின்சாரத்திற்கான நுகர்வு, பட்டியலிடுகைக்காக உயர்அழுத்த / அதி உயர் அழுத்த மின்வழங்கல் முதன்மை மின்னளவியில் பதிவு செய்யப்பட்ட மொத்த மின் நுகர்விலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

6.1.1.6 **<u>தாழ் மின்காரணிக்கான இழப்பீடு :</u>** உயர் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்த வரை, மின் நுகர்வோரின் நிறுவுகையிலுள்ள சராசரி மின்காரணி 0.90க்கு குறைவாக இருத்தல் ஆகாது. உயர் அழுத்த மின்னிணைப்பின் சராசரி மின்காரணி குறிப்பிடப்பட்ட வரம்பான 0.90க்கு குறைவாக இருக்கும்பொழுது பின்வரும் இழப்பீட்டுக் கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

| விவரங்கள் | மின்காரணி இழப்பீட்டின் பங்கீடு |
|---|---|
| 0.90 க்குக் கீழ் மற்றும் 0.85 வரை | 0.90 மின்காரணியிலிருந்து குறையும் ஒவ்வொரு 0.01 அளவு குறைவு ஒன்றிற்கு மின்நுகர்வுக் கட்டணத்தில் ஒரு விழுக்காடு வீதம் |
| 0.85க்குக் கீழ் 0.75 வரை | 0.90 மின்காரணியிலிருந்து குறையும் ஒவ்வொரு 0.01 அளவு குறைவு ஒன்றிற்கு மின்நுகர்வுக் கட்டணத்தில் ஒன்றரை விழுக்காடு வீதம் |
| 0.75க்கும் கீழ் | 0.90 மின்காரணியிலிருந்து குறையும் ஒவ்வொரு 0.01 அளவு குறைவு ஒன்றிற்கு மின்நுகர்வுக் கட்டணத்தில் இரண்டு விழுக்காடு வீதம் |

6.1.1.7 **<u>பட்டியலிடப்படக்கூடிய மின் தேவை:</u>** உயர் அழுத்த மின்நுகர்வோரைப் பொருத்தவரை, மாதம் எதற்குமான அதிகபட்ச மின் தேவைக் கட்டணங்கள், அந்த மாதத்தில் உள்ளபடியே பதிவு செய்யப்பட்ட மின் தேவை அல்லது ஒப்பந்த மின்தேவையின் கிலோ வோல்ட் ஆம்பியரில் 90 விழுக்காடு இதில் எது அதிகமோ அது விதிக்கப்படும்.

இருப்பினும், வரையறை மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நடைமுறையிலிருக்கும் போதெல்லாம் பட்டியலிடப்படக்கூடிய மின்தேவை இரண்டு பகுதியாக உள்ளபடியாக பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச மின்தேவை அல்லது அவ்வப்போது வரையறை மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகள் மூலமாக நிர்ணயம்

செய்யப்படும் மின் தேவை பங்கின் 90 விழுக்காடு இதில் எது அதிகமோ அது விதிக்கப்படும்.

6.1.1.8 உயர்அழுத்த நுகர்வோர்களைப் பொருத்தவரை ஒரு மாதத்தின் அதிகபட்ச மின் தேவையை கணக்கிடுவதற்கான ஒருங்கிணைப்புக் காலம் பதினைந்து நிமிடங்களாகும்.

**6.1.2 உயர் அழுத்த மின் கட்டணம் I A:**

| மின் கட்டண வகை | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின்கட்டணம் | |
|---|---|---|
| | மின்தேவைக்கட்டணம் ரூபாயில் / கிலோவாட் ஆம்பியர் / மாதம் | மின்திறன் கட்டணம் கிலோ வாட் மணி யூனிட் ஒன்றுக்கு காசுகளில் |
| உயர் அழுத்த மின் கட்டணம் I A | 350 | 635 |

**6.1.2.1** இந்த மின் கட்டணம் பின்வருவனவற்றிற்குப் பொருந்தக் கூடியதாகும் :

1. தேயிலைத் தோட்டங்கள், நெசவுத் தொழில்கள், உரத் தொழிற்சாலைகள், எஃகு தொழிற்சாலைகள், மிகுநீர் நிலையம், வேதியியல் தொழிற்சாலைகள் உட்பட அனைத்து உற்பத்தி மற்றும் தொழில் நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள். எனினும் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளான நீர்த்த பெட்ரோலிய வளிமம் நிரப்பும் அலகு போன்ற தயாரிப்பு இல்லாத வகையைச் சார்ந்தவைகளை இந்த மின் கட்டணவீத வகையினத்தில் சேர்க்கக்கூடாது.

2. பொதுவான தொழிலக நீரியற் கழிவுகள் சுத்திகரிப்பு நிலையம், தொழிற்பேட்டையின் நீர் சுத்திகரிப்பு / வழங்கல் பணிகள்.

3. குளிர்வைப்பறை நிலையங்கள்

**6.1.2.2** இந்த மின் கட்டணம், தமிழ்நாடு அரசின் 2008 ஆம் ஆண்டு தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கொள்கையில் பொருள் வரையறை செய்யப்பட்டவாறான தகவல் தொழில்

நுட்ப பணிகளுக்குப் பொருந்தக் கூடியதாகும். இதன் பொருள் வரையறையின்படி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

“தகவல் தொழில் நுட்ப பணிகள், அமைப்பு ஒருங்கிணைப்பு, செயலாக்கப் பணிகள், வெளிப்புறத் தகவல் பணிகள், பொருள் ஆதரவு மற்றும் நிறுவல், வன்பொருள் ஆதரவு மற்றும் நிறுவல் என்று பொதுவாக பொருள் வறையறை செய்யப்பட்டுள்ளன.”

**தகவல் தொழில் நுட்ப பணிகள் உள்ளடக்குவதாவது:**

(அ) **அமைப்பு ஒருங்கிணைப்பு உள்ளடக்குவதாவது:**

i. வலையமைப்பு மேலாண்மை பணிகள்

ii. பயன்பாட்டு ஒருங்கிணைப்பு

(ஆ) **செயற்முறைப் பணிகள் உள்ளடக்குவதாவது:**

i. வங்கித் தொழில், மனித வள மேம்பாடு, நிதி, தொழில் நுட்பம் மற்றும் பிற பகுதிகளில் வெளிப்புற பணிகள்.

ii. வங்கியல் அலுவலக ஆதரவு வெளிப்புறப் பணிகள் அல்லது வணிக அமைப்பு மாறுபாடு மற்றும் செய்முறை கலந்தாய்வுப் பணிகள்.

**(இ) வெளிப்புற தகவல் பணிகள் உள்ளடக்குவதாவது:**

i. வெளிப்புற உலகளாவிய தகவல் ஆதரவளிப்பு பணிகள்.

ii. வெளிப்புற அறிவு செய்முறை

iii. வெளிப்புற உலகளாவிய ஒப்பந்த மைய இயக்கங்கள்

iv. வெளிப்புற செய்முறை கலந்தாய்வுப் பணிகள்.

(ஈ) **பொதி மென்பொருள் ஆதரவு மற்றும் நிறுவல் உள்ளடக்குவதாவது.**

i. மென்பொருள் வடிவமைப்பு மற்றும் வளர்ச்சி ஆதரவு மற்றும் பராமரிப்பு

ii. பயன்பாட்டு நிறுவல், ஆதரவு மற்றும் பராமரிப்பு

iii. பயன்பாட்டு சோதனை.

(உ) **வன்பொருள் ஆதரவு மற்றும் நிறுவல் உள்ளடக்குவதாவது:**

i. தொழில் நுட்ப மற்றும் வலையமைப்பு இயக்க ஆதரவு

ii. வன்பொருள் நிறுவல், நிருவாகம் மற்றும் மேலாண்மை

iii. வன்பொருள் உள்கட்டமைப்பு பராமரிப்பு மற்றும் ஆதரவு.

(ஊ) இந்திய விமான நிலைய அதிகார அமைப்பின் கீழ் விமான நிலையங்களில் அளிக்கப்படும் விமானப் பணிகளுக்கும் இந்த மின் கட்டணவீதம் பொருந்தும். விமான பணி அல்லாத பிற பணிகளுக்கு பயன்படும் மின்சாரம் உயர்அழுத்தம் III வணிகம்/பல்வகை வகையினத்தின் கீழ் வகைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(எ) இந்த மின்கட்டணம் மின் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் தொடக்க நிலை (Start- up power) மின்சாரத்திற்கும் பொருந்தக்கூடியதாகும். மின் உற்பத்தியாளர்கள் வணிக ரீதியான இயக்கம் ஆரம்பித்த நாளினை விளம்புகை செய்த பின்பு இந்த மின்கட்டணத்தின் கீழ் தொடக்க நிலை மின்சாரத்தைப் பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவர். இந்த மின் தேவையானது மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்திப் பிரிவின் உயர்ந்தபட்ச மின்திறனின் அல்லது ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறான துணை மின் நுகர்வின் விழுக்காட்டில் 10 விழுக்காடு இதில் குறைந்த அளவு என்ற வரம்பிடப்படுதல் வேண்டும். இந்த மின் வழங்கல் ஆண்டு ஒன்றில் 42 நாட்களுக்கு என்று கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். நாள் அல்லது அதன் பகுதி ஒன்றுக்கு எடுக்கப்படும் மின்சாரம், இந்த நோக்கத்திற்காக ஒரு நாள் எடுக்கப்பட்டதாக கணக்கிடப்படுதல் வேண்டும். மின்காரணி இழப்பீட்டுக் கட்டணங்கள் தொடக்கநிலை மின்சாரத்திற்கு பொருந்தலாகாது.

(ஏ) உயர் அழுத்த தொழில் மின்நுகர்வோர் (உயர் அழுத்த I A), உச்ச நேரங்களின் போது பதிவு செய்யப்பட்ட மின்திறனுக்கு மின்திறன் கட்டணங்களில் 20 விழுக்காடு அதிகமாக பட்டியலிடப்படுவர். உச்ச நேரங்களின் கால அளவு காலை 6.00

மணியிலிருந்து காலை 9.00 மணி வரை மற்றும் மாலை 6.00 மணியிலிருந்து இரவு 9.00 மணி வரையிலானதாகும்.

(ஐ) உயர்அழுத்த தொழில் மின்நுகர்வோர் (உயர் அழுத்த I A), இரவு நேர மின்நுகர்வுக்கான ஊக்கத்தொகையாக இரவு 10.00 மணியிலிருந்து அதிகாலை 5.00 மணி வரையிலான காலத்தின் போது பதிவு செய்யப்பட்ட மின் நுகர்வுக்கான மின்திறன் கட்டணங்களில் 5 விழுக்காடு குறைப்பதற்கு அனுமதியளிக்கப்படுவர்.

**6.1.3 உயர் அழுத்த மின் கட்டணம் I B:**

| மின் கட்டண வகை | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் | |
|---|---|---|
| | மின்தேவைக் கட்டணம் ரூபாயில் / கிலோவாட் ஆம்பியர் / மாதம் | மின் திறன் கட்டணம் கிலோவாட் மணி யூனிட் ஒன்றுக்கு காசுகளில் |
| உயர் அழுத்த மின் கட்டணம் I B | **300** | **635** |

6.1.3.1 இந்த மின் கட்டணம் பின்வருவனவற்றிற்கு பொருந்தக் கூடியதாகும்

(அ) இருப்பூர்த்தி இழுவை (Railway traction)

(ஆ) சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் அனைத்து இணைந்த சுமைகள். ஏடிஎம் (ATM), எளிய கட்டமைப்பு வாய்ந்த வெளிப்புற கடை(kiosks), விற்பனைக் காட்சி அரங்குகள் (stalls), உணவகங்கள் போன்ற பிற இணைந்த சுமைகள் தனியாக மின்னளவியிடப்பட்டு பின் பலவகை வகையினத்தின் கீழ் கட்டணம் விதிக்கப்படுதல் வேண்டும். மேற்சொன்ன மின்நுகர்வு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் பிரதான மின் வழங்கல் முனையில் மின்னளவியிடப்பட்ட அளவிலிருந்து கழிக்கப்பட வேண்டும்.

### 6.1.4 உயர் அழுத்த மின் கட்டணம் II-A

| மின் கட்டண வகை | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் | |
|---|---|---|
| | மின்தேவைக் கட்டணம் ரூபாயில் / கிலோவாட் ஆம்பியர் / மாதம் | மின் திறன் கட்டணம் கிலோவாட் மணி யூனிட் ஒன்றுக்கு காசுகளில் |
| உயர் அழுத்த மின் கட்டணம் II A | **350** | **635** |

6.1.4.1 இந்த மின் கட்டணம், மத்திய / மாநில அரசுகளின் / உள்ளாட்சி அமைப்புகளின் / தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் / சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பின் வரும் பணிகளுக்கு பொருந்தக் கூடியதாகும் :

(அ) அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் மாணவர் இல்லங்கள் உள்ளடங்கலான கல்வி நிறுவனங்கள்.

(ஆ) பாதுகாப்பு அமைச்சகத்தின் மற்றும் மத்திய ரிசர்வ் காவல்படை(CRPF) பணியாளர் தொகுதியின் கல்வி கற்பிக்கும் மற்றும் பயிற்சி நிறுவனங்கள்.

(இ) மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சுகாதார துணை நிலையங்கள், கால் நடை மருத்துவமனைகள், தொழுநோய் நிலையங்கள் மற்றும் துணை நிலையங்கள்.

(ஈ) பொது நீர் வழங்கு பணிகள் மற்றும் கழிவு நீர் பணிகள் மற்றும் கடல் நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்.

(உ) மத்திய சிறைகள் மற்றும் மாநில அரசின் ஏனைய சிறைகள்

(ஊ) பொது விளக்கு மற்றும் மின்சார சுடுகாடு

(எ) பொது நூலகங்கள், கலைக்கூடங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள்

(ஏ) ஆராய்ச்சி ஆய்வகங்கள் மற்றம் நிலையங்கள்.

(ஐ) பால் பண்ணை பிரிவுகள்

6.1.4.2 இந்த மின்கட்டணம் பின்வருவனவற்றிற்கும் பொருந்தக்கூடியதாகும்.

(அ) குடியிருப்பு காலனிகள் மற்றும் வீட்டுவசதி வளாகங்கள், மூத்த குடிமக்களின் குழுக்கள் முதியோர் இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் பொது விளக்குக்காக பயன்படுத்தப்படும் மின் வழங்கல், குடிநீர் வழங்கல், மின்தூக்கி.

(ஆ) அரசு மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களுக்கு இணையாக நோயாளிகள் / உடனுறைபவர்களின் அனைத்து வகையினர்களுக்கும் மொத்தமாக இலவச சிகிச்சை / சேவைகள் அறக்கட்டளையினால் நடத்தப்படும் மருத்துவ சேவைகள் அளிக்கும் மருத்துவமனைகள் மற்றும் மறுவாழ்வு இல்லங்கள், பயிற்சி மற்றும் மறுவாழ்வு இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் அனாதை இல்லங்கள்.

(இ) கூடங்குளம் அணுசக்தி நிலையத்திலுள்ள கடல் நீரைச் சுத்திகரிக்கும் நிலையம் மற்றும் சென்னை கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மீஞ்சூர் கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம். புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழகத்தினால் முக்கியமாக உள்ளாட்சி அமைப்புகள் / பொது மக்களுக்கு மட்டுமே வழங்கப்படும் குடிநீர் வழங்கல் பணிகள்.

(ஈ) கூட்டுறவு பிரிவு வீட்டு வசதி சங்கத்திற்கும் மற்றும் 2005 ஆம் ஆண்டு மின்சார (இடர்பாடுகள் நீக்கம்) எட்டாவது ஆணையில் குறித்துரைக்கப்பட்டவாறான பணியாளர்களின் குடியிருப்பிடங்களுக்கு வழங்கப்படும் ஒற்றை மின் வழங்கல் (single point supply).

(உ) உள்ளபடியேயான பொது வழிபாட்டிடங்கள்.

**6.1.5 உயர் அழுத்த மின்கட்டணம் II-B**

| மின் கட்டண வகை | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் | |
|---|---|---|
| | மின் தேவைக் கட்டணம் ரூபாயில் / கிலோ வோல்ட் ஆம்பியர் / மாதம் | மின் திறன் கட்டணம் (யூனிட்) கிலோ வாட் மணி ஒன்றுக்கு காசுகளில் |
| உயர் அழுத்த மின் கட்டணம் II-B | **350** | **635** |

இந்த மின்கட்டணம் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் அவர்களால் நடத்தப்படும் மாணவர் விடுதிக்கும் பொருந்தக்கூடியதாகும்.

### 6.1.6 உயர் அழுத்த மின்கட்டணம் III

| மின் கட்டண வகை | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் | |
|---|---|---|
| | மின் தேவைக் கட்டணம் ரூபாயில் / கிலோ வோல்ட் ஆம்பியர் / மாதம் | மின் திறன் கட்டணம் கிலோ வாட் மணி ஒன்றுக்கு காசுகளில் (யூனிட்) |
| உயர் அழுத்த மின் கட்டணம் III | 350 | 800 |

இந்த மின்கட்டணம் உயர் அழுத்த மின்கட்டணம் IA, IB, II A, IIB, IV மற்றும் V ஆகியவற்றின் கீழ் வராத மின் நுகர்வோரின் பிற வகையினர் அனைவருக்கும் பொருந்தக்கூடியதாகும்.

### 6.1.7 உயர் அழுத்த மின்கட்டணம் IV :

| மின் கட்டண வகை | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் * | |
|---|---|---|
| | மின்தேவைக் கட்டணம் ரூபாயில் / கிலோ வோல்ட் / ஆம்பியர் / மாதம் | மின்திறன் கட்டணம் கிலோ வாட் மணி ஒன்றுக்கு காசுகளில் |
| உயர் அழுத்த மின்கட்டணம் IV | ஒன்றுமில்லை | 635 |

* இவ்வகை மின்நுகர்வோருக்கு அரசு மானியம் முழுவதுமாக வழங்கப்பட வேண்டும்.

இந்த மின்கட்டணம் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்படி அல்லது பிற சட்டம் எதன்படியும் பதிவுச் செய்யப்பட்ட வேளாண்மைக்கான நீரேற்று நீர்ப்பாசன சங்கங்களுக்கு பொருந்தக்கூடியதாகும்.

### 6.1.8 உயர் அழுத்த மின்கட்டணம் V

| மின் கட்டண வகை | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் | |
|---|---|---|
| | மின் தேவைக் கட்டணம் ரூபாயில் / கிலோ வோல்ட் ஆம்பியர் / மாதம் | மின் திறன் கட்டணம் (யூனிட்) கிலோ வாட் மணி ஒன்றுக்கு காசுகளில் |
| உயர் அழுத்த மின் கட்டணம் V | 350 | 1100 |

6.1.8.1 இந்த மின்கட்டணம், கட்டுமானத்திற்காகவும் பிற தற்காலிக நோக்கங்களுக்கான தற்காலிக மின் வழங்கலுக்கு பொருந்தக் கூடியதாகும்.

(அ) இந்த வகையான மின் வழங்கலுக்காக விண்ணப்பதாரர் தேவைப்படும் இடத்தெல்லாம், உரிய அதிகார அமைப்பிடமிருந்து அத்தகைய கட்டுமானம் அல்லது அத்தகைய தற்காலிக நடவடிக்கையை செய்வதற்கு தொடக்க நிலையில் / கொள்கையளவில் ஒப்புதல் பெறுதல் அந்த மின் வழங்கலைச் செயற்படுத்துவதற்கு போதுமானதாகும்.

(ஆ) தற்காலிக மின் வழங்கலை, பொருந்தக்கூடிய நிரந்தர மின் வழங்கலுக்கு மாற்றுதலைப் பொருத்தளவில் அது, விதித்தொகுப்புகள் / ஒழுங்குமுறை விதிகள் / ஆணைகளுக்கு இணங்கி நடப்பதற்கு உட்பட்டு செய்யப்படுதல் வேண்டும்.

## 6.2 தாழ்வழுத்த மின் வழங்கல் நுகர்வோருக்கான மின்கட்டணம்

### 6.2.1 தாழ்வழுத்த மின் வழங்கலுக்குப் பொருந்தக் கூடிய பொது வகைமுறைகள்

(அ) இந்த வகையான மின் வழங்கலில் மின்னிணைப்பு பெற்ற மின்னோடிகள் / விசைக்குழாய் அமைப்புகள் அனைத்தும் இந்திய தர நிர்ணய அமைப்பினால் / மின்திறன் அமைப்பினால் சான்றளிக்கப்படுதல் / ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும். 3 குதிரை சக்தி மற்றும் அதற்கு மேல் உள்ள மின்னோடிகள் / விசைக்குழாய் அமைப்புகளில் இந்திய தர நிர்ணய அமைப்பினால் சான்றளிக்கப்பட்ட போதிய மின் தேக்கிகள் அமைக்கப்படுதல் வேண்டும். இதற்கு இணங்கி நடக்காமைக்கு விதித் தொகுப்புகள் / ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறு இழப்பீட்டுக் கட்டணங்கள் விதிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) தாழ்வழுத்த மின்கட்டணம் III B மற்றும் தாழ்வழுத்த மின்கட்டணம் V ஆகியவற்றைப் பொருத்தளவில், 18.6 கிலோவாட் (25 குதிரைசக்தி) மற்றும் அதற்கு அதிகமான மின்சுமையுடன் இணைக்கப்பட்ட மின்னிணைப்புகள் அனைத்தும் 0.85 க்கு குறையாத மின் காரணியை பராமரித்து வருதல் வேண்டும். தாழ்வழுத்த மின்னிணைப்பின் சராசரி மின்காரணி 0.85 என குறிப்பிடப்பட்ட வரம்பை விட குறைவாக இருக்கும் நேர்வில், பின் வரும் இழப்பீட்டுக் கட்டணங்கள் விதிக்கப்படும்.

| மின்காரணி | மின்காரணி இழப்பீட்டு பங்கீடு |
|---|---|
| 0.85 க்குக் கீழ் மற்றும் 0.75 வரை | 0.85 மின் காரணியிலிருந்து குறையும் ஒவ்வொரு 0.01 அளவு குறைவு ஒன்றிற்கு மின்நுகர்வுக் கட்டணத்தில் ஒரு விழுக்காடு |
| 0.75 க்குக் கீழ் | 0.85 மின் காரணியிலிருந்து குறையும் ஒவ்வொரு 0.01 அளவு குறைவு ஒன்றிற்கு மின்நுகர்வுக் கட்டணத்தில் ஒன்றரை விழுக்காடு |

(இ) மின்னிணைப்புகளைத் துண்டிக்கும் நேர்வில், மின் நுகர்வோர், மின் துண்டிப்பு காலங்களின் போது அந்தந்த வகைக்குப் பொருந்தக் கூடிய நிலைக்கட்டணங்களைச் (fixed charges) செலுத்துவதற்கு கடப்பாடுடையவராவர்.

(ஈ) தாழ்வழுத்த மின் கட்டணம் II B 1, II B2, IIC, IIIA 1, IIIA2, III B, V மற்றும் VI ஆகியவற்றைப் பொருத்தளவில், நிலைக்கட்டணங்கள் ஒப்பந்தம் செய்யப்பட்ட மின் தேவையின் அடிப்படையில் கணக்கிடப்படுதல் வேண்டும். மாதாந்தர நிலைக் கட்டணங்கள் ஒரு கி.வா அல்லது அதன் பகுதிக்கு என்ற அடிப்படையில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(உ) பற்றவைப்பு அமைப்புகளுக்கான மின்வழங்கலுக்கு வகையினம் மற்றும் மின்திறனை பொருட்படுத்தாமலே 15 விழுக்காடு கூடுதல் கட்டணங்கள் விதிக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) மின் நுகர்வோரின் வளாகங்களுக்குள் 2000 சதுர அடிக்கு மேற்படாமல் கூடுதல் கட்டடம் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் மின் வழங்கல், தாழ்வழுத்த மின் கட்டணம் I B மற்றும் IV தவிர, இருந்து வரும் அந்தந்த மின் கட்டணத்தின் கீழ் வசூலிக்கப்படும். 2000 சதுர அடிக்கு மேல் செய்யப்படும் கூடுதல் கட்டுமானப் பணிகளுக்கான

பயன்பாட்டிற்கு தனிப்பட்ட மின்னிணைப்பு உரிமதாரரால் வழங்கப்படும் மற்றும் அது தாழ்வழுத்த மின் கட்டணம் VI-இன் கீழ் வசூலிக்கப்படும்.

(எ) தாழ்வழுத்த மின்கட்டணம் IIB(1), IIB(2), IIIB ஆகியவைகளைப் பொருத்தவரை செய் சட்டங்கள்/ சட்டங்களுக்கிணங்கவுள்ள வசதிகளை அல்லது மின் நுகர்வோரின் வளாகங்களுக்குள் தம்முடைய பணியாளர்கள்/மாணவர்கள்/நோயாளிகள்/ குடியிருப் போருக்கு நீட்டிக்கப்படும் வசதிகள் போன்று ஒரு மின் நுகர்வோரின் நிறுவனத்தின் முக்கியமான நோக்கத்திற்கு இணையுறுவான வசதிகளை உருவாக்குவதற்கு மின்வழங்கல் பயன்படுத்தப்படுமானால் அவ்வேலையை வெளிப்புறப்பணிகள் அடிப்படையில் மூன்றாம் தரப்பினரால் செய்யப்பட்டாலும் அல்லது நுகர்வோரால் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டாலும் அவைகளைப் பொருட்படுத்தாமலே அது உண்மையான நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும். எனினும் அத்தகைய வசதிகள் பொதுமக்களுக்கு நீட்டிக்கப்படுமானால் அல்லது பகுதி/முழு வளாகம் உணவு விற்பனை வளாகத்தில் தங்களின் பெயரில் சேவைகளை அளிக்கும் உணவுக்கடை போன்றவற்றிற்கு குத்தகைக்கு/வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தால் அத்தகைய வசதிகளுக்காக நுகரப்படும் மின்நுகர்வு உரிமதாரரால் தனியாக மின்னளவிடப்படும் மற்றும் உரிய தாழ்வழுத்த மின்கட்டண வீதத்தின் கீழ் மின்திறன் கட்டணம் மட்டுமே விதிக்கப்படும். அவ்வாறாக மின்னளவியிடப்பட்ட மின்நுகர்வு பட்டியலிடுகைக்காக தாழ்வழுத்த மின் வழங்கலுக்கான முதன்மை மின்னளவியில் பதிவு செய்யப்பட்ட மொத்த மின்நுகர்விலிருந்து கழிக்கப்படும்.

## 6.2.2 தாழ்வழுத்த மின்கட்டணம் IA

| மின் கட்டணம் | மின்நுகர்வு படிமுறை வீதங்கள்(slab) (யூனிட்டுகள்) கிலோவாட் மணியில் ஏற்ற இறக்க எல்லை மற்றும் பட்டியலிடல் காலம் (ஒன்று அல்லது இரண்டு மாதங்கள்) | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் | |
|---|---|---|---|
| | | நிலைக்கட்டணங்கள் (மாதம் ஒன்றுக்கு) | மின் திறன் கட்டணங்கள் (காசுகளில்) கிலோ வாட் மணியில் |
| தாழ்வழுத்த மின்கட்டண வீதம்–IA | மாதம் ஒன்றுக்கு 50 யூனிட்டுகள் வரை அல்லது இரண்டு மாதங்களுக்கு 100 யூனிட்டுகள் வரை மின்நுகர்வு செய்யும் நுகர்வோருக்கு * | | |
| | மாதம் ஒன்றுக்கு 0 முதல் 50 யூனிட்டுகள் வரை (அல்லது) இரண்டு மாதங்களுக்கு 0 முதல் 100 யூனிட்டுகள் வரை | 15 | 250 |
| | மாதம் ஒன்றுக்கு 51 யூனிட்டுகள் முதல் 100 யூனிட்டுகள் வரை அல்லது இரண்டு மாதங்களுக்கு 101 யூனிட்டுகள் முதல் 200 யூனிட்டுகள் வரை மின்நுகர்வு செய்யும் நுகர்வோருக்கு | | |
| | மாதம் ஒன்றுக்கு 0 முதல் 50 யூனிட்டுகள் வரை (அல்லது) 0 முதல் 100 யூனிட்டுகள் வரை இரண்டு மாதங்களுக்கு * | 15 | 250 |
| | மாதம் ஒன்றுக்கு 51 முதல் 100 யூனிட்டுகள் வரை (அல்லது) 101 யூனிட்டுகள் முதல் 200 யூனிட்டுகள் வரை இரண்டு மாதங்களுக்கு | 15 | 250 |
| | மாதம் ஒன்றுக்கு 51 யூனிட் முதல் 100 யூனிட்கள் வரை (அல்லது) 101 யூனிட்டுகள் முதல் 200 வரை இரண்டு மாதங்களுக்கு | | |
| | மாதம் ஒன்றுக்கு 101 யூனிட்டுகள் முதல் 250 யூனிட்டுகள் வரை (அல்லது) 201 யூனிட்டுகள் முதல் 500 யூனிட்டுகள் வரை இரண்டு மாதங்களுக்கு | | |
| | மாதம் ஒன்றுக்கு 0 முதல் 50 யூனிட்டுகள் வரை அல்லது இரண்டு மாதங்களுக்கு 0 முதல் 100 யூனிட்டுகள் வரை* | 20 | 250 |
| | மாதம் ஒன்றுக்கு 51 யூனிட்டுகள் முதல் 100 யூனிட்டுகள் வரை (அல்லது) 101 யூனிட்டுகள் முதல் 200 யூனிட்டுகள் வரை இரண்டு மாதங்களுக்கு | | 250 |
| | மாதம் ஒன்றுக்கு 101 யூனிட்டுகள் முதல் 250 யூனிட்டுகள் வரை (அல்லது) 201 யூனிட்டுகள் முதல் 500 யூனிட்டுகள் வரை இரண்டு மாதங்களுக்கு | | 300 |
| | மாதம் ஒன்றுக்கு 251 யூனிட்டுகள் மற்றும் அதற்கும் மேலாக அல்லது இரண்டு மாதங்களுக்கு 501 யூனிட்டுகள் மற்றும் அதற்கு மேலாக மின்நுகர்வு செய்யும் நுகர்வோருக்கு | | |
| | மாதம் ஒன்றுக்கு 0 யூனிட் முதல் 50 யூனிட்டுகள் வரை அல்லது 0 முதல் 100 வரை யூனிட்டுகள் வரை இரண்டு மாதங்களுக்கு * | 25 | 250 |
| | மாதம் ஒன்றுக்கு 51 யூனிட்கள் முதல் 100 யூனிட்டுகள் வரை அல்லது 101 முதல் 200 யூனிட்டுகள் வரை இரண்டு மாதங்களுக்கு | | 350 |
| | மாதம் ஒன்றுக்கு 101 யூனிட்கள் முதல் 250 யூனிட்டுகள் வரை அல்லது 201 முதல் 500 யூனிட்டுகள் வரை இரண்டு மாதங்களுக்கு | | 460 |
| | மாதம் ஒன்றுக்கு 251 யூனிட்கள் மற்றும் அதற்கு மேல் அல்லது 501 யூனிட்டுகள் மற்றும் அதற்கு மேல் இரண்டு மாதங்களுக்கு | | 660 |

* இவ்வகை மின்நுகர்வோருக்கு அரசால் மானியம் வழங்கப்பட வேண்டியது.

6.2.2.1 இந்த மின்கட்டணம் பின்வருவனவற்றிற்குப் பொருந்தக்கூடியதாகும் :

(அ) வீட்டு உபயோக / குடியிருப்பு நோக்கங்களுக்கான மின்விளக்குகள், மின்விசிறிகள், குளிர்சாதனக் கருவிகள், வானொலி / தொலைக்காட்சி மற்றும் பிற வீட்டு உபயோக சாதனங்கள்.

(ஆ) வீடு / குடியிருப்பிடம் / வளாகங்களில் பின்வரும் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் மின்வழங்கலில் மொத்த ஒப்பந்த சுமை 2 கிலோவாட்டிற்கு மேற்படுதலாகாது.

i. வைக்கோல் வெட்டும் இயந்திரம், பால்கறக்கும் இயந்திரம் உள்ளடங்கலாக வீட்டில் வளர்க்கும் விலங்குகளுக்கான மின்விளக்கு, குடிநீர் மற்றும் பிற வசதிகள் அளித்தல்.

ii. குடியிருப்பு வீடுகள் / கட்டடங்களிலும் அதனைச் சுற்றியும் மரங்கள் வளர்த்தல் உள்ளடங்கலான தோட்டப் பயிர்களுக்காக நீர் இறைத்தல்.

(இ) கைத்தறி நெசவாளர்களின் குடியிருப்பிடங்களிலுள்ள கைத்தறிகள் மற்றும் வெளியேயுள்ள தொழிலாளர்களின் பயன்பாட்டினை பொருட்படுத்தாமல் கொட்டகைகளிலுள்ள கைத்தறிகள் மற்றும் மின்விளக்கு, மின்விசிறிகள் மற்றும் அனைத்துப் பிற குடியிருப்பு பயன்பாடுகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் மின்சாரம்.

(ஈ) பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட மகளிர் துப்புரவு வளாகங்கள்.

(உ) சமுதாய ஊட்டச்சத்து மையங்கள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் சத்துணவு மையங்கள்.

(ஊ) அரசு / உள்ளாட்சி அமைப்புகள் / அற நிறுவனங்களால் நடத்தப்படுவதும் மொத்த இலவசமாகப் பணி செய்வதுமான முதியோர் இல்லங்கள், தொழு நோய் மையங்கள் மற்றும் துணை மையங்கள், அனாதை இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள்.

(எ) தொழிலாற்றுநர்களின் குடியிருப்பிடத்துடன் இணைந்துள்ள 200 சதுர அடி அளவு வரம்பிற்குட்பட்ட ஆலோசனை வழங்கல் அறைகள். இந்த வசதிகள் அத்தகைய

தொழிலாற்றுநர்களால் குடியிருப்பிடத்தை இதற்கு மட்டுமே பயன்படுத்துவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

(ஏ) பல மாடி குடியிருப்பிடங்கள் / குடியிருப்பு வளாகங்களில், பொது விளக்கு, குடிநீர் வழங்கல், மின்தூக்கி குடியிருப்பவர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் மின்வழங்கலைப் பொருத்தவரை, தனிப்பட்ட மின்னிணைப்பு வழங்கப்படும் மற்றும் ஒரு வளாகத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கட்டடத்தொகுதி (block) இருக்கும் நேர்வில் பொது விளக்கு, குடிநீர் வழங்கல், மற்றும் குடியிருப்பவர்களுக்காக மட்டும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் மின்தூக்கிக்கு மட்டுமே ஒவ்வொரு கட்டடத்தொகுதிக்கும் (each block) ஒரு மின்னிணைப்பு மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.

(ஐ) வீட்டு உபயோகம் மற்றும் வீட்டு உபயோகமல்லாத மின்பயன்பாடுகளைக் கொண்ட பல மாடி குடியிருப்பிடங்கள் / பல மாடி அடுக்ககங்கள் / குடியிருப்பு வளாகங்களில் பொது விளக்கு, பொது குடி நீர் வழங்கல், மின்தூக்கி, வீட்டு உபயோகமல்லாத பகுதியின் கட்டடப்பரப்பு மொத்த கட்டடப் பரப்பின் 25 விழுக்காட்டிற்கு மேற்படாதிருக்குமானால், இந்த மின்கட்டண வீதத்தின் கீழ் மின்கட்டணம் வசூலிக்கப்படும்.

(ஒ) பல மாடி குடியிருப்பு கட்டடங்களில் / தொகுப்பு வீடுகளில் உரிமையாளர்கள் / குடியிருப்பவர்களால் கூடுதலாக மின்னிணைப்பு கோரப்பட்டால், மின்னிணைப்பு வழங்கபடுதல் வேண்டும். கூடுதல் மின்னிணைப்பை செயற்படுத்துவதற்கு ஒரு மின்னளவி மட்டும் தேவைப்படுமானால் மின்கடத்திக்கு (service line) உரிய கட்டணம் மட்டும் வசூலிக்கப்படமாட்டாது.

(ஓ) உள்ளாட்சி அமைப்புகளின் மின்சுடுகாடு.

(ஔ) குயவர்கள், நகைத் தொழிலாளர்கள் முதலியவர்களால் குடியிருப்பிடத்துடன் இணைந்த இடத்தில் செய்யப்படும் கைத்திறன் தொழில் / கைவினைஞர் பணிகள் பெரும்பாலும் சொந்தமாக அல்லது குடும்ப உறுப்பினர்களால் பயன்படுத்தப்படும் மின்னிணைப்பின் மின்சுமை 1 கிலோவாட்டுக்கு மேற்படாத மின்னிணைப்பின் மின்சுமை. இந்த வசதி, குடியிருப்பிடத்திலும், அதனைச் சுற்றியுள்ள இடத்தினை அவர்களாலும் அவர்களது

குடும்ப உறுப்பினர்களாலும் சிறிய அளவு உற்பத்தி செய்வதற்காக மட்டுமே பயன்படுத்துவதற்கும் நீட்டிக்கப்படும்.

(ஃ) பந்தல்கள் / சாம்மியானாக்களில் பயன்படுத்தப்படும் கூடுதல் விளக்குகள், சர விளக்குகள் முதலியவை எவற்றிற்கும், மற்றும் இருந்து வரும் வீட்டு / குடியிருப்பு வளாகங்களிலுள்ள மின்நுகர்வோரின் குடும்ப நிகழ்ச்சிகள் / விழாக்களுக்கான மின்னிணைப்பு 3 கிலோவாட்டிற்கு மேற்படாத இணைக்கப்பட்ட மின்சுமை ஒருவார கால அளவிற்கு மேற்படுதலாகாது.

## 6.2.3 தாழ்வழுத்த மின்கட்டணம் I-B:

| மின் கட்டணம் | விவரிப்பு | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் * | |
|---|---|---|---|
| | | நிலைக் கட்டணங்கள் (ரூபாய் / மாதம்) | மின்திறன் கட்டணங்கள் காசுகளில் / கிலோவாட் மணியில் |
| தாழ்வழுத்த மின் கட்டணம் I-B | மின்னளவி நிறுவப்படும் வரையில் | 145 | ஒன்றுமில்லை |
| | மின்னளவி நிறுவப்பட்ட வுடன் | ஒன்றுமில்லை | 495 |

* இவ்வகை மின்நுகர்வோருக்கு அரசு மானியம் முழுவதுமாக வழங்கப்பட வேண்டியது.

6.2.3.1 இந்த மின்கட்டணம், கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலுள்ள குடிசைகள், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகள், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி கழகத்தின் (TAHDCO) காமராசர் ஆதி திராவிடர் வீட்டு வசதி திட்டங்கள், நீலகிரி மாவட்டத்திலுள்ள குடிசைகள் மற்றும் மாநில மற்றும் மத்திய அரசுகளின் திட்டங்களின்படி கற்காரை(concrete) சுவர்களுடன் உள்ள குடிசை ஆகியவற்றிற்குப் பொருந்தக்கூடியதாகும். இந்த மின்கட்டணம் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொருந்தக்கூடியதாகும்:

(அ) குடிசை என்பது மாநில/மத்திய அரசாங்கங்களால் இந்தத் திட்டங்களில் ஒப்புதலளிக்கப்பட்டவாறான மண்சுவருடன், கூரை வேய்ந்த / ஓடு போட்ட / கூரையில் கல்நார் / நெளி நெளியாக வளைக்கப்பட்ட துத்தநாகம் பூசப்பட்ட தகடுகள் போன்ற

உலோகத் தகடுகளாலான கூரை போட்ட மற்றும்  திண்காரை கட்டுசுவர் உடைய 250 சதுர அடிக்கு மேற்படாத குடியிருப்பிடம் என்று பொருள்படும்.

(ஆ) குடிசை ஒன்றுக்கு 40 வாட்ஸ்க்கு மேற்படாத ஒரே ஒரு விளக்கு மட்டும் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(இ) இந்த குடிசையில் குடியிருப்பவர்களுக்கு, வண்ணத் தொலைக்காட்சி, மின்விசிறி, கலவைக்கருவி (mixie), மாவரைக்கும் கருவி மற்றும் மடிக்கணினிகள் போன்ற பிற சாதனங்களை அரசு அளிக்கும்விடத்தெல்லாம், உரிய கூடுதல் மின்சுமை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படலாம்.

6.2.3.2 மேலேயுள்ள (அ) முதல் (இ) வரையுள்ளவற்றில் வகுத்துரைக்கப்பட்ட வரன்முறைகள் மீறப்படும் போதெல்லாம், மின்னிணைப்பு வகையானது உடனடியாக தாழ்வழுத்த மின்கட்டணம் I-A இன் கீழ் கொண்டு வரப்படுதல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க பட்டியலிடப்படும்.

**6.2.4 தாழ்வழுத்த மின்கட்டணம் I-C:**

| மின்கட்டணம் | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் | |
|---|---|---|
| | நிலைக்கட்டணங்கள் (ரூபாய் / மாதம்) | மின்திறன் கட்டணங்கள் காசுகளில் / கிலோவாட் மணியில் |
| தாழ்வழுத்த மின்கட்டணம் I – C | 60 | 460 |

6.2.4.1 இந்த மின்கட்டணம், இருப்பூர்திப் பணியாளர்களின் குடியிருப்புகள், தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகள், பாதுகாப்புப் படையினரின் குடியிருப்புகள், காவல் துறையினரின் குடியிருப்புகள், கூடங்குளம் அணுசக்தி திட்ட குடியிருப்பில்லங்கள் போன்ற பணியாளர்களின் குடியிருப்புகளுக்கான தாழ்வழுத்த பெருமளவு மின்வழங்கலுக்கு பொருந்தக்கூடியதாகும்.

6.2.4.2 இந்த மின்கட்டணத்தின் மின்திறன் கட்டணங்கள், எந்த உயர் அழுத்த / அதி உயர் அழுத்த மின்நுகர்வோர், தங்களுடைய குடியிருப்புகள் / குடியிருப்பில்லங்களுக்கு இந்த வகையின் கீழுள்ள மின் வழங்கலை நீட்டிப்பதற்கு தெரிவு செய்துள்ளனரோ அந்த மின்நுகர்வோருக்கும் பொருந்தக்கூடியதாகும்.

6.2.4.3 கூட்டுறவு பிரிவு வீட்டு வசதி சங்கத்திற்கும் மற்றும் “2005 ஆம் ஆண்டு மின்சார (இடர்ப்பாடுகள் நீக்கம்) எட்டாவது ஆணையில்” குறித்துரைக்கப்பட்டவாறான பணியாளர்களின் குடியிருப்பிடங்களுக்கு வழங்கப்படும் ஒற்றை மின்வழங்கல்.

**6.2.5 தாழ்வழுத்த மின்கட்டணம் II-A:**

| மின்கட்டணம் | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் | |
|---|---|---|
| | நிலைக் கட்டணங்கள் (ரூபாய் கிலோவாட் / மாதம்) | மின்திறன் கட்டணங்கள் காசுகளில் / கிலோவாட் மணியில் |
| தாழ்வழுத்த மின்கட்டணம் II-A | **60** | **635** |

6.2.5.1 இந்த மின்கட்டணம், அரசு/உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்படும் பொது விளக்குகளுக்கும், மற்றும் அரசு உள்ளாட்சி அமைப்பு /சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் / தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றினால் வழங்கப்படும் பொது குடிநீர் வழங்கல் மற்றும் பொது கழிவு நீர் அகற்றல் ஆகியவற்றிற்கு பொருந்தக்கூடியதாகும்.

6.2.5.2 அரசு / உள்ளாட்சி அமைப்புகள் / சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஆகியவற்றினால் பொது விநியோகத்திற்கு குடிநீர் எடுப்பதற்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட தனியார் வேளாண் கிணறுகள் / தனியார் கிணறுகள்.

**6.2.5.3** முக்கியமாக, உள்ளாட்சி அமைப்புகள் / பொதுமக்கள்/ தோட்டத் தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்கு மட்டுமே புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழகத்தினால் வழங்கப்படும் குடிநீர் வழங்கல் பணிகள்.

**6.2.5.4** சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (SIDCO) மற்றும் பிற தொழிற்பேட்டைகளுக்கான தெருவிளக்குகளுக்குரிய தனிப்பட்ட மின்னிணைப்புகள்.

**6.2.5.5** இருப்பூர்தி சந்திக் கடவுப்பாதைகளுக்குரிய (Railway level crossings) மின்வழங்கல்.

### 6.2.6 தாழ்வழுத்த மின்கட்டணம் II-B(1)

| மின்கட்டணம் | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் | |
|---|---|---|
| | நிலைக் கட்டணங்கள் (கிலோவாட் ஒன்றுக்கு / மாதம் ஒன்றுக்கு ரூபாயில்) | மின்திறன் கட்டணங்கள் காசுகளில் / கிலோவாட் மணியில் |
| தாழ்வழுத்த மின்கட்டணம் II-B(1) | **60** | **575** |

6.2.6.1 இந்த மின்கட்டணம், அரசு / அரசு முகவாண்மை / உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான அல்லது அவற்றிடமிருந்து நிதியுதவி பெறும் பின்வரும் நிறுவனங்களுக்குப் பொருந்தக்கூடியதாகும் :

(அ) கல்வி/ நலப்பணி நிறுவனங்கள் மற்றும் அத்தகைய நிறுவனங்களால் நடத்தப்படும் மாணவர் விடுதி, பிற விடுதி, இளைஞர் / மாணவர் விடுதி மற்றும் சாரணர் முகாம்.

(ஆ) மருத்துவமனைகள், மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனைகள்.

(இ) மத்திய சிறைகள் மற்றும் மாநில அரசின் ஏனைய சிறைகள்

(ஈ) ஆராய்ச்சி ஆய்வகங்கள் / நிறுவனங்கள்.

(உ) யானைகளுக்கான புத்துணர்வு முகாம்.

(ஊ) மாநிலச் சட்ட உதவி மையம்.

(எ) கலைக்கூடங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள்

(ஏ) பொது நூலகங்கள்

6.2.6.2 இந்த மின்கட்டணம் பின்வரும் எந்த நிறுவனங்கள் மொத்தமாக இலவச பணி செய்கின்றனவோ அந்த நிறுவனங்களுக்குப் பொருந்தும்.

(அ) மருந்தகங்கள், குழந்தையர் காப்பகங்கள் மற்றும் பொழுதுபோக்கு மையங்கள்.

(ஆ) நூலகங்கள்

(இ) நெடுஞ்சாலைகளிலுள்ள அவசர கால விபத்து சிகிச்சை மையங்கள், மனநோயாளிகள் மற்றும் பார்வையற்றவர்கள் மற்றும் பிறருக்கான மருத்துவமனைகள் மற்றும் மறுவாழ்வு மையங்கள், குறித்த காலத்திற்குரிய புற்றுநோய் கவனிப்பு மையங்கள் மற்றும் பழங்குடியினர் பகுதிகளிலுள்ள மருத்துவமனை.

(ஈ) மாற்றுத் திறனாளிகளுக்காக / அவர்களால் நடத்தப்படும் நிறுவனங்கள்.

(உ) பயிற்சி மற்றும் மறுவாழ்வு மையங்கள்.

(ஊ) மாணவர் விடுதி

(எ) இரத்த சேமிப்பு வங்கி

6.2.6.3 இந்த மின்கட்டணம், சேவை நோக்கத்துடன் நடத்தப்படும் தனியார் கலைக்கூடங்கள் மற்றும் அருங்காட்சியகங்களுக்கும் பொருந்தும்.

### 6.2.7 தாழ்வழுத்த மின்கட்டணம் II-B(2):

| மின்கட்டணம் | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் | |
|---|---|---|
| | நிலைக் கட்டணங்கள் (கிலோவாட் ஒன்றுக்கு / மாதம் ஒன்றுக்கு ரூபாய்களில்) | மின்திறன் கட்டணங்கள் காசுகளில் / கிலோவாட் மணியில் |
| தாழ்வழுத்த மின்கட்டணம் II-B(2) | 60 | 750 |

இந்த மின்கட்டணம், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும், அவர்களால் நடத்தப்படும் மாணவர் விடுதிகளுக்கும் பொருந்தக்கூடியதாகும்.

## 6.2.8 தாழ்வழுத்த மின்கட்டணம் II-C:

| மின் கட்டணம் | மின்நுகர்வு படிமுறைவீத ஏற்ற இறக்க எல்லை கிலோவாட் மணியில் மற்றும் பட்டியலிடல் காலஅளவு | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் * | |
|---|---|---|---|
| | | நிலைக் கட்டணங்கள் (கிலோவாட் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய்) | மின்திறன் கட்டணங்கள் கிலோவாட் மணி ஒன்றுக்கு காசுகளில் |
| தாழ்வழுத்த மின்கட்டணம் II-C | மாதம் ஒன்றுக்கு 0 முதல் 60 யூனிட்டுகள் அல்லது இரண்டு மாதங்களுக்கு 120 யூனிட்டுகள் | 60 | 575 |
| | மாதம் ஒன்றுக்கு 60 யூனிட்டுகளுக்கு மேல் அல்லது இரண்டு மாதங்களுக்கு 120 யூனிட்டுக்கு மேல் | | 575 |

* இவ்வகை மின் நுகர்வோருக்கு அரசால் மானியம் வழங்கப்பட வேண்டியது.

6.2.8.1 இந்த மின்கட்டணம், திருச்சி மலைக்கோட்டை கோயில் அதன் சுற்றுப்புறங்கள் மற்றும் கோயிலின் வழியாக அமைந்துள்ள சாலை மற்றும் வழி உள்ளடங்கலான உள்ளபடியான பொது வழிபாட்டிடங்களுக்கு பொருந்தக்கூடியதாகும்.

6.2.8.2 இருந்து வரும் சலுகைகள், ஆணையத்தினால் மேலும் ஆணை பிறப்பிக்கப்படும் வரையில் 1000 ரூபாய்க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளதும், தமிழ்நாடு அரசால் ஏற்கெனவே அறிவிக்கை செய்யப்பட்ட உள்ளபடியேயான பொது வழிபாட்டிடங்களுக்கு அதே விதிமுறைகள் மற்றும் வரையறைகளின்படி தொடர்ந்து இருந்து வரும்.

## 6.2.9 தாழ்வழுத்த மின்கட்டணம் III-A (1):

| மின்கட்டணம் | மின்நுகர்வு படிமுறைவீதம் – கிலோவாட் மணியில் ஏற்ற இறக்க எல்லை மற்றும் பட்டியலிடல் காலஅளவு | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் | |
|---|---|---|---|
| | | நிலைக்கட்டணங்கள் (கிலோவாட் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய்) | மின்திறன் கட்டணங்கள் கிலோவாட் மணி ஒன்றுக்கு காசுகளில் |
| தாழ்வழுத்த மின்கட்டணம் III-A(1) | மாதம் ஒன்றுக்கு 0 முதல் 250 யூனிட்டுகள் அல்லது இரண்டு மாதங்களுக்கு 0 முதல் 500 யூனிட்டுகள் | 20 | 400 |
| | மாதம் ஒன்றுக்கு 251 யூனிட்டுகள் மற்றும் அதற்கு மேல் அல்லது இரண்டு மாதங்களுக்கு 501 யூனிட்டுகள் மற்றும் அதற்கு மேல் | | 460 |

6.2.9.1 இந்த மின்கட்டண வகையின் கீழுள்ள மின்வழங்கலுக்கான ஒப்பந்த மின்சுமை 12 கிலோவாட்டுக்கு மேற்படுதல் ஆகாது.

6.2.9.2 இந்த மின்கட்டணம், 1951 ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 65/1951) முதலாம் பின் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட தொழில்கள் எவையும் சம்பந்தமான பொருள்கள் உற்பத்தி செய்வதில்

அல்லது தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள குடிசை மற்றும் குறுந்தொழில்கள், குறுதொழில் நிறுவனங்களுக்கு பொருந்தக்கூடியதாகும்.

6.2.9.3 தாழ்வழுத்த மின்கட்டணம் IIIA (1) இன் கீழ் மின்னிணைப்பு கோரி குறுந்தொழில் நிறுவனம் பொருள்கள் உற்பத்தி செய்வதில் அல்லது தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது என்பதை நிரூபித்து விண்ணப்பித்துள்ளவரும், தொழில் துறையிடமிருந்து பெற்ற குடிசைத் தொழில் சான்றிதழை அல்லது எவருடைய அதிகாரவரம்பின் கீழ் இந்த நிறுவனம் அமைந்துள்ளதோ அந்த மாவட்ட தொழிற்மையத்திடம், குறுந்தொழில் நிறுவனம் பொருள் உற்பத்தி செய்வதற்காக அல்லது தயாரிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளதற்காக தொழில் முனைவோரின் அமைப்பு விதிக் குறிப்பை சான்றாக தாக்கல் செய்துள்ளவருமான ஆர்வமுள்ள மின்நுகர்வோர் **2006** ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வளர்ச்சி சட்டத்தின்படி (சட்டம் 27/2006) மாவட்ட தொழில் வளர்ச்சி மையத்தினால் வழங்கப்பட்ட ஒப்புகைச் சான்றிதழை முன்னிலைப்படுத்துதல் வேண்டும்.

**6.2.9.4** சிறு தொழில் நிறுவனங்கள் / குறுந் தொழில்கள் நிறுவன சான்றிதழின் அடிப்படையில் தாழ்வழுத்த மின்கட்டணம் IIIA(1)-இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள இருந்து வரும் மின்நுகர்வோருக்கு, அதே மின்கட்டணம் தொடர்ந்து விதிக்கப்படும்.

**6.2.9.5** இந்த மின்கட்டணம் சிறிய நவரத்தினக் கல் அறுக்கும் பிரிவுகள், தரிசு நில மேம்பாடு, சலவைப் பணிகள் மற்றும் பொது தொழிலக நீரியற் கழிவுகள் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றிற்கும் பொருந்தக்கூடியதாகும்.

**6.2.9.6** இந்த மின்கட்டணம், காப்பி கொட்டை அரைத்தல், பனிக்கட்டி தொழிற்சாலை, வாகன கட்டமைப்பு தொழில் பிரிவுகள், மரம் அறுக்கும் ஆலை, அரிசி ஆலைகள், மாவு ஆலை, மின்கலத் திறனேற்றல் பிரிவுகள், மற்றும் பால்பண்ணை தொழிற் பிரிவுகள் ஆகியவற்றிற்குப் பொருந்தக்கூடியதாகும்.

**6.2.9.7** இந்த மின்கட்டணம், பட்டுப்புழு வளர்ப்பு, மலர் இயல், தோட்டக்கலை, சிப்பிக்காளான் பயிரிடுதல், கால்நடைப்பண்ணை, கோழி வளர்ப்பு மற்றும் பறவை வளர்ப்பு மற்றும் மீன்/இறால் மீன் வளர்ப்பு ஆகிய தொழில்களுக்கும் பொருந்தக்கூடியதாகும்.

6.2.9.8 இந்த மின்கட்டணம், தாழ்வழுத்த மின்கட்டணம் IV-இல் குறித்துரைக்கப்பட்டவாறு, ‘‘வேளாண் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளின்’’ நோக்கத்திற்காக நீர் இறைத்தல் / நீர் வழங்கல் ஆகியவற்றிற்கும் பொருந்தக்கூடியதாகும். ஆனால், விண்ணப்பதாரர் தாழ்வழுத்த மின்கட்டணம் IV- இன் கீழ் வேளாண் நீர் வழங்கலுக்கு வகை செய்யும் நோக்கத்திற்காக, குறிப்பாக பேணப்பட்டு வரும் முதுநிலைப் பட்டியலின்படி தாழ்வழுத்த மின்கட்டணம் IV-இன் கீழ் மின்வழங்கல் பெறமுடியாமலிருக்க வேண்டும். உரிமதாரரால், இந்த நோக்கத்திற்காக பேணப்பட்டு வரும் குறித்த வகை முதுநிலை பட்டியலின்படி தாழ்வழுத்த மின்கட்டணம் IV-(Normal category)-இன் கீழ் முறையான மின்வழங்கலைப் பெறுவதற்கு, அத்தகைய விண்ணப்பதாரர் தகுதியுடையவராகிற போதெல்லாம், இந்த உட்–கூறில் குறிப்பிடப்பட்ட குறித்த வகை நோக்கத்திற்காகப் பெறப்பட்ட மின்வழங்கலின் தாழ்வழுத்த மின்கட்டணம் III-A(1)-ஐ, தாழ்வழுத்த மின்கட்டணம் IV(Normal category) ஆக மாற்றப்படும். அதன்பின்பு, தாழ்வழுத்த மின்கட்டணம் IV-க்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள் மட்டுமே பொருந்தும்.

## 6.2.10 தாழ்வழுத்த மின்கட்டணம் III-A(2):

<table>
<tr><th rowspan="2">மின்கட்டணம்</th><th rowspan="2">மின்நுகர்வு<br>படிமுறை வீதங்கள் – கிலோவாட் மணியில் ஏற்ற இறக்க எல்லை மற்றும் பட்டியலிடல் காலஅளவு</th><th colspan="2">ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம்</th></tr>
<tr><th>நிலைக் கட்டணங்கள் (கிலோவாட் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு)</th><th>மின்திறன் கட்டணங்கள் கிலோவாட் மணி ஒன்றுக்கு காசுகளில்</th></tr>
<tr><td rowspan="8">தாழ்வழுத்த மின்கட்டணம் III – A(2)</td><td colspan="3">(i) மாதம் ஒன்றுக்கு 250 யூனிட்டுகள் வரை (அல்லது )இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட்டுகள் நுகரும் மின் நுகர்வோருக்கு</td></tr>
<tr><td>மாதம் ஒன்றுக்கு 0 முதல் 250 யூனிட்டுகள் அல்லது இரண்டு மாதங்களுக்கு 0 முதல்500 யூனிட்டுகள் வரை</td><td>60</td><td>520</td></tr>
<tr><td colspan="3">(ii) மாதம் ஒன்றுக்கு 251 யூனிட்டுகளுக்கு மேல் (அல்லது ) இரண்டு மாதங்களுக்கு 501 யூனிட்டுகளும் அதற்கு மேல் நுகரும் மின் நுகர்வோர்</td></tr>
<tr><td>மாதம் ஒன்றுக்கு 0 முதல் 250 யூனிட்டுகள் அல்லது இரண்டு மாதங்களுக்கு 0 முதல் 500 யூனிட்டுகள் வரை</td><td rowspan="4">60</td><td>520</td></tr>
<tr><td>மாதம் ஒன்றுக்கு 251 முதல் 500 யூனிட்டுகள் அல்லது இரண்டு மாதங்களுக்கு 501 யூனிட்டுகள் முதல் 1000 யூனிட்டுகள் வரை</td><td>575</td></tr>
<tr><td>மாதம் ஒன்றுக்கு 501 யூனிட்டுகள்–முதல் 750 யூனிட்டுகள் வரை அல்லது இரண்டு மாதங்களுக்கு 1001 முதல் 1500 யூனிட்டுகள் வரை</td><td>575</td></tr>
<tr><td>மாதம் ஒன்றுக்கு 751 யூனிட்டுகள் மற்றும் அதற்கு மேலும் அல்லது இரண்டு மாதங்களுக்கு 1501 யூனிட்டுகள் மற்றும் அதற்குமேல்</td><td>575</td></tr>
</table>

* இவ்வகை நுகர்வோருக்கு அரசால் மானியம் வழங்கப்பட வேண்டியது.

6.2.10.1 இந்த வகையின்கீழ் மின்னிணைப்பிற்கான ஒப்பந்த மின்சுமை 12 கிலோவாட்டுக்கு மேற்படுதல் ஆகாது.

6.2.10.2 இந்த மின்கட்டணம், விசைத்தறிகள், பின்னப்பட்ட மணிக்கயிறு உற்பத்தி செய்தல் மற்றும் அது தொடர்பான துணைக் குறுந்தொழில்கள் பாவுநூல் நூற்றல், முறுக்கேற்றல், திருக்குதல், தொழிலில் ஈடுபட்டுள்ள குறுந்தொழில்களுக்கு பொருந்தக்கூடியதாகும்.

**6.2.11 தாழ்வழுத்த மின்கட்டணம் III – B :**

| மின்கட்டணம் | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் | |
|---|---|---|
| | நிலைக்கட்டணங்கள் (கிலோவாட் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய்) | மின்திறன் கட்டணங்கள் கிலோவாட் மணி ஒன்றுக்கு காசுகளில் |
| தாழ்வழுத்த மின்கட்டணம் III - B | 35 | 635 |

6.2.11.1 இந்த மின்கட்டணம், தாழ்வழுத்த மின்கட்டணம் III A (1) மற்றும் III -A(2) இன் கீழ் வராத அனைத்து தொழிற்சாலைகளுக்கும் பொருந்தக்கூடியதாகும். தாழ்வழுத்த மின் கட்டணம் IIIA(1) மற்றும் IIIA(2) இன் கீழ்வரும் அனைத்துதொழிற்சாலைகளுக்கும் அத்தகைய தொழிற்சாலைகளுக்கான இணைப்புப் பெற்ற மின்சுமை 12 கிலோவாட்டுக்கு மேற்படுமானால் இந்த மின்கட்டண வகையின் கீழ் வரும்.

6.2.11.2 இந்த மின்கட்டணம், தமிழ்நாடு அரசின் மற்றும் அவ்வப்போது திருத்தம் செய்யப்படும் 2008 ஆம் ஆண்டு தகவல் தொடர்பு தொழில் நுட்பக் கொள்கையில் பொருள் வரையறை செய்யப்பட்டவாறான தகவல் தொழில் நுட்ப பணிகளுக்குப் பொருந்தக்கூடியதாகும் :

> ‘‘தகவல் தொழில் நுட்ப பணிகள், அமைப்பு ஒருங்கிணைப்பு, செயலாக்கப் பணிகள், வெளிப்புற தகவல் பணிகள், பொதி மென்பொருள் ஆதரவு மற்றும் நிறுவல், வன்பொருள் ஆதரவு மற்றும் நிறுவல் என்று பொதுவாக பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளன’’.

**தகவல் தொழில்நுட்ப பணிகள் உள்ளடக்குவதாவது:**

(அ) **அமைப்பு ஒருங்கிணைப்பு உள்ளடக்குவதாவது :**

i. வலையமைப்பு மேலாண்மைப் பணிகள்

ii. பயன்பாட்டு ஒருங்கிணைப்பு

(ஆ) **<u>செய்முறைப் பணிகள் உள்ளடக்குவதாவது</u>:**

i. வங்கித்தொழில், மனிதவள மேம்பாடு, நிதி, தொழில் நுட்பம் மற்றும் பிற பகுதிகளில் வெளிப்புற பணிகள்.

ii. வங்கி அலுவலக ஆதரவு வெளிப்புற பணிகள் அல்லது வணிக அமைப்பு மாறுபாடு மற்றும் செய்முறை கலந்தாய்வு பணிகள்

(இ) **வெளிப்புற தகவல் பணிகள் உள்ளடக்குவதாவது:**

i. வெளிப்புற உலகளாவிய தகவல் ஆதரவுப்பணிகள்

ii. வெளிப்புற அறிவுச் செய்முறை

iii. வெளிப்புற உலகளாவிய ஒப்பந்த மைய இயக்கங்கள்

iv. வெளிப்புற செய்முறை கலந்தாய்வுப் பணிகள்

(ஈ) **பொதிமென்பொருள் ஆதரவு மற்றும் நிறுவல் <u>உள்ளடக்குவதாவது:</u>**

i. மென்பொருள் வடிவமைப்பு மற்றும் வளர்ச்சி, ஆதரவு மற்றும் பராமரிப்பு

ii. பயன்பாட்டு நிறுவல், ஆதரவு மற்றும் பராமரிப்பு

iii. பயன்பாட்டு சோதனை

(உ) **வன்பொருள் ஆதரவு மற்றும் நிறுவல் உள்ளடக்குவதாவது:**

i. தொழில் நுட்ப மற்றும் வலையமைப்பு இயக்க ஆதரவு

ii. வன்பொருள் நிறுவல், நிருவாகம் மற்றும் மேலாண்மை

iii. வன்பொருள் உள்கட்டமைப்பு பராமரிப்பு மற்றும் ஆதரவு

**6.2.11.3** தாழ்வழுத்த மின்கட்டணம் III-B இன் கீழ் மின்னிணைப்பு கோரி, இந்த தொழிற்சாலைகள் பொருள்கள் உற்பத்தி செய்வதில் அல்லது தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளன என்பதை

நிரூபித்துள்ளவரும் விண்ணப்பித்துள்ளவருமான ஆர்வமுள்ள மின்நுகர்வோர் மாவட்ட தொழில் மையத்திடமிருந்து பெறப்பட்ட (Udyog Aadhar Memorandum) சான்றிதழை முன்னிலைப்படுத்துதல் வேண்டும்.

**6.2.12 தாழ்வழுத்த மின் கட்டணம் IV:**

| மின்கட்டணம் | விவரிப்பு | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் * | |
|---|---|---|---|
| | | நிலைக் கட்டணங்கள் (ஆண்டொன்றுக்கு குதிரைசக்தி ஒன்றுக்கு ரூபாய்) | மின்திறன் கட்டணங்கள் காசுகளில் / கிலோவாட் மணியில் |
| தாழ்வழுத்த மின்கட்டணம் IV | மின்னளவி நிறுவப்படும் வரையில் | 2875 | ஒன்றுமில்லை |
| | மின்னளவி நிறுவப்படுகையில் | ஒன்றுமில்லை | 322 |

* இவ்வகை மின்நுகர்வோருக்கு அரசு மானியம் முழுவதுமாக வழங்கப்பட வேண்டியது.

6.2.12.1 இந்த மின்கட்டணம், உணவுப் பயிர்கள், காய்கறிகள், விதைகள், மரங்கள் மற்றும் பிற செடிகள் பயிரிடுதல் போன்ற அனைத்து வேளாண் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு நீர் இறைத்தல்/நீர்வழங்கல் ஆகியவற்றிற்குப் பொருந்தக் கூடியதாகும். வேளாண்மை தொடர்பான நடவடிக்கைகளுக்காக நிறைவேற்றப்படும் பட்டு வளர்ப்பு, மலர் இயல், தோட்டக் கலை, சிப்பிக் காளான் பயிரிடுதல், கால்நடைப்பண்ணை, கோழி வளர்ப்பு மற்றும் பிற பறவை வளர்ப்பு மற்றும் மீன் / இறால் மீன்வளர்ப்பு ஆகியவை வேளாண் நடவடிக்கைகளாகப் பொருள் கொள்ளப்படும்.

6.2.12.2 இந்த மின்கட்டணத்தின் கீழுள்ள மின்னிணைப்புகள் உண்மையான பயன்பாட்டிற்கான முன்னோடி விளக்குகளின் வாட்டேஜ் உள்ளடங்கலாக அதிகபட்சம் 150 வாட்ஸ்க்கு உட்பட்டு ஒப்பந்த மின்சுமையின் 1000 வாட்ஸ் ஒன்றுக்கு 50 வாட்ஸ் வரையிலான மின்விளக்கு மின்சுமை இணைப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.

6.2.12.3 ஒப்பந்த மின்சுமையின் வரம்புக்கு உட்பட்டு, இந்த வகையின் கீழுள்ள மின்வழங்கலானது, பால் கறத்தல், கரும்பு சாறு பிழிதல், கதிரறுப்பு, செடியின் தண்டு / வைக்கோல் வெட்டுதல், அடித்தல், வேளாண் விளை பொருள்களை சுத்தம் செய்தல் உரிமதாரரால்

ஒப்புதலளிக்கப்பட்டவாறு மற்றும் முத்திரையிடப்பட்டவாறு இணைப்பு முறை மாற்றல் மூலம் கிணற்றிலிருந்து சேறு / வண்டல் மண் எடுத்தலுக்காக பயன்படுத்தப்படும் பாரந்தூக்கிப் பொறி ஆகியவற்றிற்காக பயன்படுத்தப்பட கூடும் இணைப்பு முறை மாற்றல் மின்வழங்கலை ஒன்று விசைக் குழாய் அமைப்பு அல்லது இந்தக் கூறில் குறிப்பிடப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வகை செய்யும். விசைக் குழாய் அமைப்புகள் மற்றும் பிற நோக்கங்களுக்காக ஒரே நேரத்தில் மின்வழங்கலைப் பயன்படுத்துதல் கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது. மின்நுகர்வோர், இந்த நோக்கத்திற்காக கூடுதல் கம்பியிடல் எதனையும் செய்வதற்கான பாதுகாப்பு வரன்முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

**6.2.12.4** இந்த மின்கட்டணம், மின்பயன்பாடு வேளாண்மை மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்காக இருக்குமானால், நிலத்தின் உடைமையைப் பொருட்படுத்தாமலே பொருந்தக் கூடியதாகும்.

**6.2.12.5** வேளாண் மின்நுகர்வோர், பண்ணை வீடு கட்டுதல் மற்றும் அது தொடர்பான பணிகளுக்காக கொட்டகைகள் போடுதல் உள்ளடங்கலாக பண்ணை வீட்டிலுள்ள நியாயமான வீட்டு உபயோகத்திற்காக கிணற்றிலிருந்து நீர் இறைப்பதற்கு பயன் படுத்துவதற்கு அனுமதிக்கப்படுவர்.

**6.2.12.6** மின்விளக்கு எரிக்கும்பொருட்டு அனுமதிக்கப்பட்ட வரம்பிற்கு மேற்பட்ட பிற நோக்கத்திற்கான மின்வழங்கல், உரிய தாழ்வழுத்த மின்கட்டணத்தின் கீழ் தனிப்பட்ட மின்னிணைப்புகள் மூலமாக மட்டுமே வழங்கப்படும். உரிய மின்கட்டணத்தின் கீழ் வேளாண்மை நோக்கமல்லாதவற்றிற்கு அதே கிணற்றிலிருந்து நீர் இறைத்தலுக்கான மின்னிணைப்புகளுக்கு அனுமதியளிக்கப்படும்.

**6.2.12.7** இந்த மின்கட்டணம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் மற்றும் ஆராய்ச்சி மையங்களின், அரசு விதைப் பண்ணைகளின், விசைக்குழாய் அமைப்புகள், தமிழ்நாடு வனத்துறையின் விசைக்குழாய் அமைப்புகள், அரசு தென்னை வளர்ப்பிடங்களிலுள்ள

விசைக்குழாய் அமைப்புகள், அரசு விதைப் பண்ணைகளிலுள்ள விசைக்குழாய் அமைப்புகள் ஆகியவற்றிற்குப் பொருந்தக்கூடியதாகும்.

6.2.12.8 வேளாண் பயன்பாட்டிற்காக நீர் இறைத்தல் மற்றும் வடிகால் நீரைச் சுத்தமாக்குதல்.

## 6.2.13. தாழ்வழுத்த மின்கட்டணம் V:

| மின்கட்டணம் | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் | | |
|---|---|---|---|
| | மின்நுகர்வு படிமுறை வீதங்கள் – ஏற்ற இறக்க எல்லை கிலோவாட் மணியில் மற்றும் பட்டியலிடல் காலஅளவு | நிலைக் கட்டணங்கள் (மாதம் ஒன்றுக்கு கிலோவாட் ஒன்றுக்கு ரூபாய்) | மின்திறன் கட்டணங்கள் கிலோவாட் மணி ஒன்றுக்கு காசுகளில் |
| தாழ்வழுத்த மின்கட்டணம் V | மாதம் ஒன்றுக்கு 50 யூனிட்டுகள் வரை அல்லது இரண்டு மாதங்களுக்கு 100 யூனிட்டுகள் வரை | 70 | 500 |
| | மாதம் ஒன்றுக்கு 50 யூனிட்டுகளுக்கு மேல் அல்லது இரண்டு மாதங்களுக்கு 100 யூனிட்டுகளுக்கு மேல் (அனைத்து யூனிட்டுகளுக்கும்) நுகரும் மின்நுகர்வுக்காக | | 805 |

6.2.13.1 இந்த மின்கட்டணம், தாழ்வழுத்த IA, IB, IC, IIA, IIB(1), IIB(2), II C, III A(1), IIIA(2), III B, IV, மற்றும் VI ஆகியவற்றின் கீழ் வகைப்படுத்தப்படாத மின்நுகர்வோருக்கு பொருந்தக் கூடியதாகும்.

6.2.13.2 பல மாடி குடியிருப்பிடங்கள் / பல மாடிக் கட்டடங்கள் / குடியிருப்பு வளாகங்கள் பொருத்தவரை வணிக மற்றும் பிற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் அடுக்கங்கள் குடியிருப்பிடங்களின் எண்ணிக்கையானது, மொத்த கட்டுமான பகுதியில் 25 விழுக்காட்டிற்கு மேற்படுமிடத்து பொது விளக்கு, நீர்வழங்கல், மின்தூக்கி மற்றும் பிற

வசதிகள் போன்ற பொது பயன்பாடுகள் தொடர்பான தாழ்வழுத்த மின்னிணைப்புகளுக்கான கட்டணம் இந்த மின்கட்டணத்தின் கீழ் வசூலிக்கப்படும்.

### 6.2.14 தாழ்வழுத்த மின்கட்டணம் VI:

| மின்கட்டணம் | ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் கட்டணம் | |
|---|---|---|
| | நிலைக் கட்டணங்கள் (மாதம் ஒன்றுக்கு கிலோவாட் ஒன்றுக்கு ரூபாய்) | மின்திறன் கட்டணங்கள் காசுகளில் / கிலோவாட் மணியில் |
| தாழ்வழுத்த மின்கட்டணம் VI | 345 | 1200 |

6.2.14.1 இந்த மின்கட்டணம், தற்காலிக நடவடிக்கைகள், கட்டடக் கட்டுமானம் மற்றும் அபரிமிதமான விளக்கொளி ஆகியவற்றிற்கான மின்வழங்கலுக்கு பொருந்தக் கூடியதாகும்.

6.2.14.2 இருந்து வரும் மின்நுகர்வோரின் வளாகங்களில் 2000 சதுர அடிக்கு மேல் கட்டப்படும் கூடுதல் கட்டுமானத்திற்கான மின்வழங்கலானது, தனிப்பட்ட மின்னிணைப்பு மூலமாக மட்டுமே அளிக்கப்படும் மற்றும் இந்த மின்கட்டணம் வசூலிக்கப்படும்.

6.2.14.3 தற்காலிக மின்வழங்கல், அத்தகைய கட்டுமானத்திற்கான அல்லது அத்தகைய தற்காலிக நடவடிக்கையை செய்வதற்கான தொடக்க / கொள்கையளவிலான ஒப்புதலளிப்பு தேவைப்படும் போதெல்லாம், உரிய அதிகார அமைப்பிடமிருந்து விண்ணப்பதாரரால் பெறப்பட்டது மின்வழங்கலை செயற்படுத்துவதற்கு போதுமானதாகும்.

6.2.14.4 தற்காலிக மின்வழங்கலை பொருந்தக்கூடிய நிரந்தர மின்வழங்கலாக மாற்றுவதைப் பொருத்தளவில், அது, விதித் தொகுப்புகள் / ஒழுங்குமுறைவிதிகள் / ஆணைகளுக்கு இணங்கி நடப்பதற்கு உட்பட்டு செய்யப்படுதல் வேண்டும்.

6.2.14.5 அபரிமிதமான விளக்கொளியைப் பொருத்தளவில், அந்த விளக்கொளி அடிக்கடி அல்லது நிரந்தரமாக செய்யப்படுமானால் அபரிமிதமான விளக்கொளிக்கு தனிப்பட்ட முறையான மின்னிணைப்பு வழங்கப்படும் மற்றும் இந்த மின்கட்டணம் வசூலிக்கப்படும்.

6.2.14.6 இந்த மின்வழங்கல், இருந்து வரும் மின்னளவி பொருத்தப்பட்ட மின்னிணைப்பிலிருந்து பெறப்படும் தற்காலிக நடவடிக்கை / விளக்கொளியானது குறுகிய கால அளவிற்கு பயன்படுத்தப்படுமானால், மின்திறன் கட்டணக் கணக்கீடு / தற்காலிக விளக்கொளி நடவடிக்கைக்கான நிலைக் கட்டணங்கள் மின்னிணைப்பு பெற்ற மின்சுமை மற்றும் தற்காலிக மின்வழங்கலின் கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் செய்யப்படும். மின்னிணைப்பு பெற்ற மின்சுமையானது கிலோவாட்டில் அல்லது அதன் பகுதியில் கணக்கிடப்படும். நிலைக்கட்டணங்கள் ஒரு மாதத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு ஆகும். அந்தந்த பட்டியலிடல் கால அளவின் போது மின்னளவியின் நுகர்வுக்கு வரம்பிடப்பட்டதும் அத்தகையவாறு கணக்கிடப்பட்டதுமான மின்சாரத்தினை உரியவாறு வரவு வைத்தல் இருந்து வரும் மின்னிணைப்பின் முறையான பட்டியலிடல் நோக்கத்திற்கான அந்தந்த பட்டியலிடல் கால அளவின்போது மின்னளவியில் பதிவு செய்யப்பட்ட மின்சாரத்தின் அளவில் வழங்கப்படும். மின்நுகர்வோர், மின் கம்பியிடலுக்கான பாதுகாப்பு வரன்முறைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

6.2.14.7 பின்வருவன அபரிமிதமான விளக்கொளியாக கருதப்படும்.

(அ) விளம்பரத்தட்டிகள் மற்றும் விளம்பரப்பலகைகளுக்காக வைக்கப்படும் விளக்கொளி.

(ஆ) கட்டடத்திற்கு வெளியில் மற்றும் விருந்துகள் / விழாக்கள் / சிறப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்காக திறந்த பகுதிகளில் வைக்கப்படும் அதிகமான கூடுதலான விளக்கொளி.

(இ) காட்சிக்கு வைக்கப்படும் விளக்குகள், தொடர் வரிசையாகவுள்ள விளக்குகள், அலங்கார விளக்குகள் சிறப்பு தோற்றக் காட்சி விளக்குகள், செவ்வொளி விளக்குகள், அணி வேலைப்பாடுடைய விளக்குகள், பேரொளி விளக்குகள் முதலியவற்றின் வாயிலாக வெளிப்புறபரப்பில் / கட்டடங்களில் / கடைகளின் வெளியில் வைக்கப்படும் விளக்கொளி.

(ஈ) பந்தல்களில் / சாம்மியானக்களில், வழிநடை பாதைகளில், தெருக்களில், சாலைகளில் பொதுக் கூட்டங்களுக்காக வைக்கப்படும் தற்காலிக விளக்கொளி.

**விளக்கம் :** கடையின்/கட்டடங்களின் பெயர் மற்றும் பிற விவரங்களை சுட்டிக்காட்டும் / வெளிப்படுத்தும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் மின்வழங்கல் அபரிமிதமான விளக்கொளியாகக் கருதப்படுதல் ஆகாது.

**6.3 மின்கட்டண பட்டியலின் பொருந்துந்தன்மை:**

6.3.1 மேலேயுள்ள மின்கட்டண பட்டியல், ஆணையத்தினால் குறித்துரைக்கப்பட்ட மின்வழங்கல் விதித்தொகுப்பின் மற்றும் மின்பகிர்மான விதித்தொகுப்பின் பொது வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் சேர்த்துப் படிக்கப்படுதல் வேண்டும்.

**6.3.2** இந்த ஆணைக்கு இணங்க மின்நுகர்வோருக்கான மின்கட்டண வகையிலுள்ள மாற்றத்தை செயற்படுத்துதல் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் பொறுப்பாகும்.

**6.3.3** இந்த ஆணையத்தின் மின்கட்டண பட்டியல், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இணையதளத்தில் மற்றும் அதன் அனைத்துப் பிரிவுகளிலும், மற்றும் பிற அலுவலகங்களிலும் உரிமதாரரால் அனைவரின் கவனத்தைக் கவரக்கூடிய வகையில் காட்சிக்கு வைக்கப்படுதல் வேண்டும்.